


# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-


## நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்!


மலர்: 18 | Volume: 18 ஜனவரி 2023 | January 2023 இதழ்: 12 | Issue: 12









ஒடிசா மாநிலம் மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டா பணித்தளம்
ராக்காபுளி கிராம ஆலய திறப்புவிழா








# உங்கள் சகோதரனிடமிருந்து...



வாக்குமாறாத தேவனாகிய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் கர்த்தருக்குள் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்தப் புதிய ஆண்டில் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய ஆண்டு பிறந்தவுடன் இந்த ஆண்டாவது என் குடும்பத்தில் நன்மையான காரியம் நடக்குமா இந்த ஆண்டாவது என் தொழில் ஆசீர்வதிக்கப்படுமா என்று எதிர்பார்ப்போடு கூட இருக்கிறீர்களா! நிச்சயமாக கர்த்தராகிய இயேசு உங்கள் குடும்பத்தில் தொழிலில் எல்லாத் தடைகளையும் மாற்றி இந்த ஆண்டு உங்களுக்கு முன்பாகப் போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவார்.

இந்தப் புதிய ஆண்டில் இயேசுவோடு இணைந்து செயல்படுங்கள். உங்கள் ஆத்துமாவிலே ஜெபம் பண்ணவில்லையே, வேதத்தை மறந்துவிட்டேனே என்ற குற்ற உணர்வு இல்லாதபடிக்கு பாருங்கள். உங்கள் தியாகமான காணிக்கையும் ஜெபமும் கடந்த ஆண்டு முழுவதும் எங்களை உற்சாகப்படுத்தியது.

இந்த ஆண்டிலும் உங்கள் ஜெபங்களில் நமது மிஷனெரிகளை நினைத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுடைய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவ கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

(T.ஆசீர் ஞானராஜ்)

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

**96294 99532**

24 மணி நேர ஜெப உதவிக்காக:

**94869 19522, 81909 25800**

ஊழிய விபரங்களுக்கு: 96294 99532

Email: calvarygospelmm@gmail.com

Follow us youtube channel:

**Asir Gnanaraj**

https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOI4zg (or)



**நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். – ஏசாயா 45:2**

## வாக்குத்தத்த செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, நான் என்று சொல்லக் கூடிய வார்த்தையை சொன்னவர் சாதாரணமானவர் அல்ல. அவர் வார்த்தையினாலே உலகத்தை உருவாக்கியவர். ஒரு வார்த்தையை சொல்லக் கூடிய மனிதனுக்கும் தெய்வத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது.

ஒருவேளை மனிதன் நம்மை பார்த்து ஒரு வார்த்தையை சொல்லுவானனானால் உங்கள் மேல் அன்பு இருந்தால் கூட சில நேரங்களில் அதை நிறைவேற்ற முடியாமல் போய் விடும். காரணம் அவன் மனிதன். ஆனால் ஆண்டவர் ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கைக் கொடுத்தால் அதை நிறைவேற்றியே தீருவார். அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியும். நான் உனக்கு முன்னாக இந்த புதிய ஆண்டிற்குள்ளே போகிறேன். நான் உனக்கு முன்பே போய் உன் வாழ்க்கையிலிருக்கிற கோணலானவைகளைச் செவ்வையாக்குகிறேன் என்று ஆண்டவரே சொல்லுகிறார். என் மகனே! என் மகளே! இந்த புதிய ஆண்டைக் குறித்து நீ கலங்க வேண்டாம். உலகத்திலுள்ள சூழ்நிலைகளையும் தேசத்தின் நிகழ்வுகளையும் நீ பார்த்து கலங்கி நிற்க வேண்டாம். நான் உனக்கு முன்பாக போவேன். உன் வாழ்க்கையில் கோணலான எல்லாவற்றையும் உனக்கு எதிராக நிற்கிற எல்லாவற்றையும் நான் தடை செய்து போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆங்கில வேதாகமத்திலே கோணல் என்ற இடத்திலே மலையாக (Mountain) இருந்தாலும் அதை நான் தகர்த்து போட்டு விடுவேன். ஒரு வேளை உங்கள் குடும்பமோ, தொழிலோ உருக்குலைந்து போயிருந்தால் கூட உனக்காக நான் உருவாக்குவேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மரித்து அடக்கம்பண்ணப்பட்டு நான்கு நாளான லாசருவின் சரீரத்தைப் பார்த்து லாசருவே வெளியே வா என்று இயேசு சொன்ன போது கல்லறைக்குள்ளே இருந்து லாசரு வெளியே வந்தான். அது தான் நம்முடைய ஆண்டவர் அவர் மருத்துவத்திற்கு அப்பாற்பட்டவர். இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவன் அவர் தான் சொல்கிறார்.

*நான் உனக்கு முன்பாக போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். உருக்குலைந்து போன வாழ்க்கையை நான் உருவாக்குவேன். சரீரத்தை நான் உருவாக்குவேன் என்கிறார்.*

*நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன் என்று சாதாரண மனிதன் சொல்லவில்லை. ஒரு அதிகாரி சொல்லவில்லை, தேசத்தை ஆளுகிற தலைவர் சொல்லவில்லை, அரசியல்வாதி சொல்லவில்லை. அந்த வார்த்தையை சொன்னவர் உங்களையும் என்னையும் உருவாக்கின தெய்வம் சொல்லுகிறார். அவர் பொய் சொல்லுகிறவர் அல்ல. மனம் மாற மனுபுத்திரனும் அல்ல.*

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா தேசத்திலே புளோரிடா மாகாணத்திலே மிகப்பெரிய புயல் சேதம் உண்டானது. பல ஆண்டு பழமையான மரங்கள் எல்லாமே வேரோடு ரோட்டிலே சாய்ந்தது. முழு மாநிலமும் இருளிலே மூழ்கிப்போய் கிடந்தது. அந்த சமயத்திலே வாகனத்திலே அந்த மாகாணம் முழுவதும் சுற்றிப் பார்த்த மேயர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் ஜனங்களே நீங்கள் பயப்பட வேண்டாம். நாளை இந்த இடத்திலே 24 மணி நேரத்திற்குள்ளாக புயல் சேதத்தினால் வந்த எல்லாவற்றையும் நாங்கள் ஒழுங்கு செய்து விடுவோம். எல்லாம் சீரமைக்கப்பட்டு விடும்; என்று ஒரு வாக்குறுதியை சொன்னார் ஜனங்கள் எல்லாருக்குள்ளும் ஒரு பெரிய கேள்வி அமெரிக்கா இதுவரை சந்திக்காத ஒரு அழிவை சந்தித்திருக்கிறது. இதைவிட சின்ன சின்ன புயல் வந்த காலத்திலெல்லாம் அரசாங்கத்தினாலே எத்தனை நாட்களோ ஒழுங்கு செய்ய முடியாத நிலை வந்ததே. ஆனால் இதை எப்படி சரி செய்ய முடியும் என்ற பெரிய கேள்வி இருந்தது. ஆனால் அந்த மாகாணம் அடிக்கடி புயல் சேதத்தினால் பாதிக்கப்படுவதினாலே அந்த மேயர் புதிதாக ஒரு வாகனத்தை உருவாக்கினார். அது யாருக்கும் அறிக்கையாக வெளியிடப்படவில்லை. அநேக வாகனங்கள் அதைப் போல உருவாக்கப்பட்டது. அதன் முன் பகுதி ஒரு பொக்லைன் இயந்திரத்தோடு இணைக்கப்பட்டிருக்கும். அதனுடைய பின் பகுதியிலே ஒரு பெரிய இயந்திரம் இருக்கும். அது மரத்தையெல்லாம் தூளாக்கக் கூடிய ஒரு இயந்திரம். அதற்கு பின் பகுதியிலே ஒரு சின்ன டிராக். முன்புறம் மரத்தையெல்லாம் பொக்லைன் இயந்திரம் தூக்கி பின்னால் இருக்கும் இயந்திரத்திற்குள் போட்டால் எல்லாமே தூளாக மாறியது. வேக வேகமாக மின்கம்பங்கள் எல்லாம் மீண்டும் நடப்பட்டு மோட்டார் தானியங்கி ஏணி செய்து அதிலே மனிதர்கள் போய் மின்சார கம்பிகளை சரி செய்கிறார்கள். இரவு போய் பகல் வந்தது. சரியாக இருபத்து நான்கு மணி நேரத்திலே அந்த மாநிலம் முழுவதும் புயல் சேதம் வந்ததற்குரிய அறிகுறியே இல்லாதபடிக்கு மாற்றப்பட்டது.**

*ஒரு மனிதன் சொல்லக் கூடிய வார்த்தை நிறைவேறக் கூடுமானால் நம்முடைய தேவனால் வாக்கை நிறைவேற்ற முடியாதா? சிந்தித்துப்*

பாருங்கள். இந்த ஆண்டிலே ஆண்டவர் உனக்கு முன்னாக போய் கோணலாணவைகளை செவ்வையாக்குவேன் என்று வாக்கு கொடுக்கிறார். ஐயோ என் வாழ்க்கை அவ்வளவு தான் முடிந்து விட்டது. இனி என் பிள்ளையினுடைய வாழ்க்கையிலே ஒரு நன்மை வருமா என்று இந்த வார்த்தையை கண்ணீரோடு வாசித்துக் கொண்டிருக்கிறீர்களா! தேவனுடைய சமுகத்திலே கொண்டு வந்து வைக்கப்பட்ட கோல்களிலே ஆரோனின் கோல் துளிர்த்தது, பூத்தது, காய்த்தது வாதுமை பழங்களை தந்தது. அந்த தேவன் உன் பிள்ளைகளின் வாழ்க்கையைக் குறித்து உனக்கு சொல்லுகிறார். உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை சீக்கிரத்திலே துளிர்க்கும். அதை எந்த வல்லமையினாலும் தடை செய்ய முடியாது. கோணலானவைகளை ஆண்டவர் செவ்வைப்படுத்தக் கூடியவர். வார்த்தையிலே உண்மையுள்ளவர். வாக்குமாறாத ஒரே தேவன். ஒருவேளை உலகம் கைவிடலாம். நம்பினவர்கள் கைவிடலாம். ஆனால் உங்களை இரட்சித்த உங்களுக்காக ஜீவனை தந்த இரட்சகர் ஒரு போதும் உங்களை மறப்பதில்லை. உங்கள் சரீரத்திலுள்ள உள்ளுறுப்புகள் மாத்திரமல்ல உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. சகோதரனே, சகோதரியே உங்கள் தலையிலிருக்கிற மயிரை உங்களால் எண்ணக்கூடுமா? அது உங்கள் சரீரத்தின் உறுப்பு அல்லவா அதையும் தேவன் எண்ணி எழுதி வைத்திருக்கிறாரே. கண்ணை இமை காப்பது போல காக்கிற ஆண்டவர் உங்களுக்காக எல்லாவற்றையும் அவர் செய்வார்.

**கொரோனா காலம் முடிந்த சமயத்திலே ஒரு தாயார் என்னை பார்க்கும்படிக்கு வந்தார்கள். அவர்களால் இயன்ற மட்டும் காணிக்கையை சேகரித்து எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்களால் சொல்ல முடியாத அளவிற்கு வாழ்க்கையில் வேதனை. அழுது கொண்டே சொன்னார்கள். கொரோனா காலத்திலே அந்த தாயார் தனிமையாக வீட்டிலே இருந்திருக்கிறார்கள். மூன்று பிள்ளைகள் அவர்களுக்குண்டு.**


WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

பிள்ளைகளெல்லாம் வெளியே இருக்கிறார்கள். அந்த சமயத்திலே எல்லா இடத்திலேயும் உயிர் சேதங்கள் ஏற்பட்டது. நம்முடைய தேசத்திலும் மரண ஓலமான ஒரு சூழ்நிலை. அப்பொழுது அந்த தாயாருக்கு இடைவிடாது ஜுரம் வந்தது. அவர்களாலே எழுந்து எந்தவேலையும் செய்ய முடியவில்லை. பிள்ளைகளிடம் தொடர்பு கொண்டு பேசினார்கள். என்னால் மருத்துவமனைக்கு கூட செல்லமுடியவில்லை. எனக்கு வந்து உதவி செய்யுங்கள் என்று மூன்று பிள்ளைகளையும் கேட்ட போது பிள்ளைகளெல்லாம் நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனால் தேசமே இன்றைக்கு கலங்கிப் போய் இருக்கிறது. உங்களைப் பார்க்க வந்து எங்களுக்கும் ஒருவேளை கொரோனா வந்து விட்டால் எங்கள் பிள்ளைளெல்லாம் பாதிக்கப்படுவார்களே. தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள் எங்களால் உங்களுக்கு இந்த நேரத்தில் உதவி செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். கடைசியாக பெண் பிள்ளையிடம் கேட்ட போது அம்மா நீங்கள் போய் கோவிட் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். அதில் பிரச்சனை ஒன்றுமில்லை என்று முடிவு வந்து விட்டால் நான் வந்து உங்களை கூட்டிச் செல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மகள் வந்து நம்மை கூப்பிட்டுக்கொண்டு போவாள் என்று நினைத்து அவர்கள் மருத்துவமனைக்கு சென்றிருக்கிறார்கள். தனியாக சென்றிருக்கிறார்கள். கோவிட் பரிசோதனை செய்து குறித்த நாளிலே முடிவு வந்தது. இந்த தாயாருக்கு மிகவும் பயம். எப்போதுமே ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவரே அந்தநோய் மாத்திரம் எனக்கு வந்துவிடவே கூடாது என்று ஜெபித்தார்கள். பரிசோதனை முடிவில் கொரோனா இல்லை என்று வந்தது. மிகவும் சந்தோஷத்துடன் தன்னுடைய மகளுக்கு தொடர்பு கொண்டு பேசினார்கள். ஆனால் மகள் உங்களுக்குத்தான் இருபது நாட்களாக ஜுரம் விடவே இல்லையே. அதனால் என்னால் வர முடியாது. ஒருவேளை இன்னும் ஒரு வாரம் கழித்து கூட கோவிட் வரலாமே. இல்லை இந்த பரிசோதனை அறிக்கை கூட தவறாக இருக்கலாமே இன்னொரு முறை ஒரு வாரம் கழித்து மற்றொரு பரிசோதனை செய்து கொள்ளுங்கள் அதற்கு பின்பு நாம் முடிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லி விட்டாள். மிகுந்த துக்கத்தோடு காணப்பட்ட இவர்களுக்கு ஒன்றரை மாதத்திற்கு முன்பாக அனுப்பப்பட்ட நம்முடைய எழுப்புதல் தொனி பத்திரிக்கை மிகவும் தாமதமாக அவர்கள்; கையில் கிடைத்ததாம். அந்த பத்திரிக்கையை பார்த்த போது முன் பகுதியிலே இயேசுவின் புகைப்படம் இருந்திருக்கிறது. அதை பார்த்துக் கொண்டே அந்த சகோதரி அழுதிருக்கிறார்கள். யார் கைவிட்டாலும் நான் கைவிடமாட்டேன் என்று சொல்லியிருக்கிறீர்களே அப்பா! எவ்வளவோ சிகிச்சை எடுத்தும் எனக்கு இந்த காய்ச்சல் போகவே இல்லையே. பிள்ளைகள் கூட கைவிட்டு விட்டார்களே, நீர் என்னை கைவிட்டு விடுவீரா என்று சொல்லி அந்த புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே கண்ணீரை தாரை தாரையாக வடித்திருக்கிறார்கள். பகல் நேரம் பத்திரிக்கையை

தலைக்கு அடியில் வைத்து கொண்டு அயர்ந்து தூங்கிவிட்டார்களாம். கொஞ்ச நேரத்திலே அவர்கள் ஒரு தரிசனத்தைக் கண்டிருக்கிறார்கள். அதில் வெண் வஸ்திரம் தரித்திருந்த மூன்று பேர் வந்து அந்த தாயாரின் படுக்கைக்கு அருகில் இருக்கிற இருக்கையில் போய் உட்கார்ந்தார்களாம். நடுவில் இருக்கிறவரைப் பார்த்தால் அந்த பத்திரிக்கையில் முன் அட்டைப் படத்திலிருக்கிற முக சாயலைப் போல இருந்ததாம். அப்போது அவர் தாயாரின் பெயரை சொல்லி மகளே உனக்கு என்ன செய்கிறது என்று கேட்ட போது அவர்கள் ஐயா எனக்கு தலையெல்லாம் நோகுது வெடிப்பது போல இருக்கிறது. கை,கால் குளிரினால் ஆடிக்கொண்டிருக்கிறது. ஜூரம் கொஞ்சம் கூட குறையவில்லை. காலெல்லாம் வலிக்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை என்று புலம்பினார்களாம். உனக்கு தலை வலிக்கிறதா என்று தலை பகுதியில் கை வைத்த போது அந்த தலைவலி நின்று விட்டது. இன்னும் உனக்கு என்ன செய்கிறது என்று கேட்டபோது எனக்கு முதுகுவலிக்கிறது என்று சொன்னவுடன் முதுகை அப்படியே தடவிக் கொடுத்திருக்கிறார். முதுகு வலி நீங்கியது. இன்னும் என்ன செய்கிறது என்று கேட்ட போது மூட்டு வலிக்கிறது என்று சொன்னவுடனே உள்ளங்கால் வரைக்கும் அவர் தடவி கொடுத்த போது முற்றிலுமாய் அவர்கள் சரீரத்திலே சுகத்தை உணர்ந்தார்கள். ஆனால் இது எல்லாம் தரிசனத்தில் நடந்தது. இப்போது அவர்கள் திடீரென்று எழுந்து உட்கார்ந்த போது மூன்று பேர் தரிசனத்திலே பார்த்ததிலே இரண்டு பேர் அங்கே இல்லை ஒருவர் மாத்திரம் எழும்பி நின்று கொண்டிருக்கிறார். அவருடைய முகத்தையே பார்க்கிறார்கள். நீங்கள் யார் கதவு பூட்டப்பட்டிருக்கிறதே நீங்கள் யார் என்று அந்த தாயார் கேட்ட போது நான் இயேசு என்று சொல்லிவிட்டு இயேசு அப்படியே கடந்து போனார். இவர்கள் அற்புதமான சுகத்தை பெற்றுக்கொண்டார்கள்.

*பிரியமானவர்களே, உலகமே உங்களை கைவிட்டாலும் உங்களுக்காக சிலுவையிலே இரத்தத்தை சிந்தின ஆண்டவர் உங்கள் சரீரத்திலே ஜீவன் இருக்கும் வரைக்கும் அவர் உங்களுக்கு பூமியிலே எவ்வளவு நாட்களை நியமித்து வைத்திருக்கிறாரோ அந்த நாட்கள் முழுவதும் அவர் உங்களை விசாரித்து, போஷித்து சுகமாக்கி உங்களை ஆசீர்வதித்து நடத்துவார். அவர் உருக்குலைந்த உங்களுடைய வாழ்க்கையை திரும்ப உருவாக்குவேன் என்று சொல்லுகிறார். என் குடும்பத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே. என் மனைவி எனக்கு கீழ்ப்படியவில்லையே, என் கணவன் என்னை நேசிக்கவில்லையே பிள்ளைகள் என்னை மறந்துவிட்டார்கள். எத்தனை காலமாய் குடும்பத்திற்காக நான் ஜெபித்திருக்கிறேன். ஒரு மாற்றமும் இல்லையே. பிள்ளைகள் அடங்காதவர்களாக இருக்கிறார்களே, என்று பிள்ளைகளைக் குறித்து வெளியே சொல்ல முடியாத துக்கத்தோடு இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்களா?*

***வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு,***

***அவனைக் (மோசேயை) கொல்லப்பார்த்தார். அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமானபுருஷன்என்றாள். யாத்திராகமம் 4:24,25*** மோசே எபிரேயனாக இருந்த போதும் அவன் பார்வோனின் அரண்மனையிலே, பார்வோன் குமாரத்தியின் மகனாக வளர்க்கப்பட்டான். தன் சகோதரர்களுக்கு அநியாயம் செய்யப்படுவதைக் கண்டு அவர்களை எப்படியாகிலும் இரட்சிக்க நினைத்து அவன் எகிப்தியனை கொலை செய்தான். இஸ்ரவேலரான, அடிமைகளுக்காக மோசே ஒரு எகிப்தியனை கொலை செய்ததை அறிந்த பார்வோன் அவன் இனத்திற்கு உதவி செய்ய அரண்மனைக்குள்ளிருந்து அவன் செயல்பட்டதை உணர்ந்த போது மோசேயை கொலை செய்ய தீர்மானித்தான். இஸ்ரவேலரை தேவன் என்னைக் கொண்டு தான் இரட்சிப்பார் என்று நாற்பது ஆண்டுகள் போராடிக்கொண்டிருந்த மோசே எகிப்திலே இருக்க முடியாதபடி அவன் மீதியான் தேசத்திற்கு ஓடிப்போனான். மீதியானிலே அவன் எத்திரோ என்ற மனிதன் வீட்டில் தங்கியிருந்த போது அவன் தன்னுடைய மூத்தகுமாரத்தி சிப்போராளை மோசேக்கு விவாகம் செய்து கொடுத்தான். அவள் எத்தியோப்பிய ஸ்திரீயாக இருந்தாள். எத்தியோப்பியர்கள் என்றால் கருப்பின மக்கள் ஆவார்கள். இஸ்ரவேலர்கள் நல்ல சிவந்த மேனியாக அழகான ரூபமாக இருப்பார்கள். அவன் சிப்போராளுடைய அழகிலே மயங்கி அவளைத் திருமணம் செய்யவில்லை. செய்வதறியாது நாற்பது ஆண்டுகள் மீதியானிலே இருந்த போதுதான் சூழ்நிலைக் கைதியாக மோசே அந்நிய ஸ்திரீயை விவாகம் செய்தான். ஆனால் சிப்போராளோ எப்பொழுதும் தேவனுக்கு எதிர்த்து நிற்கக் கூடியவளாய் இருந்தாள். பிள்ளைகள் பிறந்த போது எட்டாம் நாளிலே இஸ்ரவேலர் விருத்த சேதனம் செய்யக் கூடியவர்களாய் இருந்தார்கள். ஆனால் மோசேக்கு பிறந்த இரண்டு பிள்ளைகளும் எத்தனையோ ஆண்டுகளாகியும் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை அதற்கு சிப்போராள் உடன்படவில்லை. உன் தெய்வத்தை நீயே வைத்துக்கொள். எனக்கு உன் தெய்வம் தேவையில்லை என்ற நிலையில் அவள் வாழ்க்கை இருந்திருக்கக் கூடும். உன் உபதேசத்தை நீயே வைத்துக்கொள் நான் அதற்கு கீழ்ப்படிய மாட்டேன் என்று அவள் விருத்தசேதனம் பண்ண உடன்படவில்லை. அப்பொழுது மோசே மிகப்பெரிய தேவனுடைய அழைப்பை பெற்றான். அவன் எகிப்தை நோக்கிப் போக வேண்டும். பார்வோன் கையிலிருந்த தேவ ஜனத்தை மீட்க வேண்டும். தேவ அழைப்பை தரிசனத்தை பெற்றுக்கொண்டு புறப்படும் நேரத்திலே அவன் குடும்பமோ ஊழியத்திற்கான ஆயத்தமே இல்லாமல் இருந்ததை

*நினைத்து அவன் துக்கப்பட்டான் வேதனைப்பட்டான். முடிவென்ன? மோசேயை தேவன் அவர்கள் புறப்பட்ட வழியிலே கொல்லப்பார்த்தார். அவனுக்கு மரணத்துக்கேதுவான வியாதி இருந்ததைக் கண்ட சிப்போராள் பயந்தாள் நடுங்கினாள் ஐயோ கணவனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ இந்த தெய்வத்தை குறித்து அடிக்கடி சொல்லுவாரே நம்முடைய கீழ்ப்படியாமையினிமித்தம் அந்த தெய்வம் தான் நம்முடைய கணவனுக்கு ஏதோ ஒரு வியாதியை கொண்டு வந்திருக்கிறது என்று பயந்து அந்த இடத்திலே அவளாகவே தன் பிள்ளைக்கு விருத்தசேதனம் செய்வதை நாம் பார்க்கிறோம். மோசேயினுடைய குடும்பத்தை இரட்சிப்பதற்காக தேவன் மோசேயை சிட்சித்து அந்த குடும்பத்தை தான் உலாவக் கூடிய ஒரு ஆலயமாய் மாற்றினதை நாம் பார்க்கிறோம்.*

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சகோதரி பத்து பக்கத்திலே எனக்கொரு சாட்சியை எழுதியிருந்தார்கள். அவர்கள் எழுத துவங்கும் போது அண்ணா, உங்களுக்கு ஊழியத்திலே நிறைய பாரங்கள் பொறுப்புகள் உண்டு. நீங்கள் இவ்வளவு பெரிய சாட்சியை படிக்க முடியுமா? நேரம் இல்லையென்று அப்படியே போட்டு விடாதீர்கள் தயவுசெய்து இந்த சகோதரிக்கு ஆண்டவர் செய்த அற்புதத்தை முழுவதுமாக வாசியுங்கள் என்று எழுதியிருந்தது. நான் பொறுமையோடு அந்த பத்து பக்கத்தையும் வாசித்தேன். அந்த சகோதரி ஆண்டவரை அறியாத ஒரு மகள். ஆனால் குறிப்பிட்ட ஒரு பட்டணத்திற்கு ஒரு வீட்டிற்கு நம்முடைய பத்திரிக்கை சென்றிருக்கிறது. அந்த வீட்டிற்கு பக்கத்து வீடு தான் அந்த சகோதரியின் வீடு. ஆலயத்திற்கு போகக் கூடிய அந்த சகோதரி பக்கத்து வீட்டு சகோதரிக்கு இயேசுவைப் பற்றி எப்பொழுதும் சொல்வார்களாம். அதோடு விட்டு விடாமல் எழுப்புதல் தொனி பத்திரிக்கையை கொண்டு போய் கொடுப்பார்களாம். இதிலே நல்ல உயிருள்ள சாட்சிகளை அந்த ஊழியக்காரர் எழுதியிருப்பார் அதினால் கொஞ்சம் இதை வாசியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மனந்திரும்பாதவர்கள் வேதத்தை படித்தால் புரியாது. ஆனால் ஆவிக்குரிய புத்தகத்தை படிக்கும் போது சுலபமாக தெய்வத்தை குறித்து அறிந்து கொள்ள முடியும். அவர்கள் அந்த புத்தகத்தை படிக்க படிக்க அவர்களுடைய உள்ளம் தொடப்பட்டது. பாவத்திற்காக மனங்கசந்தார்கள். இரட்சிப்பை பெற்றுக்கொண்டார்கள். பிற்பாடு வீட்டிற்குள்ளே அவர்கள் நடக்கை வேறுவிதமாய் இருந்தது. கணவன், மாமியாரோடு சண்டை போடுவது, தொலைக்காட்சியில் சீரியல் பார்ப்பதற்காக மாமியாரோடு சண்டை போடுவது, கணவன் வேலை முடிந்து வீட்டிற்கு வந்தால் தினமும் பஞ் சாயத்து என்பது இல்லாமல் தற்போது அந்த சகோதரி தொலைக்காட்சி பார்ப்பது கிடையாது, சண்டை போடுவது கிடையாது, மிகவும் அமைதியாக மாறிவிட்டார்கள். எப்பொழுதும் அறைக்குள்ளே இருந்து வேதாகமத்தை வாசிப்பது ஜெபிப்பது என்று இருந்ததைப்**

பார்த்து அந்த சகோதரியின் மாமியார் தன் மகனிடம் என்னப்பா உன் மனைவி இப்பொழுது சண்டை போடுவது இல்லை கோபப்படுவது இல்லை பிள்ளைகளை அடிப்பது இல்லை வேலையெல்லாம் நன்றாக செய்கிறாள். என்ன தான் நடக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். அப்பொழுது அந்த சகோதரி இயேசு என் பாவத்தை மன்னித்து என்னை இரட்சித்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். அதனால் என்னை ஆலயத்திற்கு போக விடுவீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். என்னை எந்த தொந்தரவும் பண்ணாதே நீயும் பிள்ளைகள் வந்தால் அவர்களையும் கூட்டிக்கொண்டு போ என்று கணவர் சொல்லியிருக்கிறார். மிகுந்த சந்தோஷத்தோடு ஆலயத்திற்கு சென்று ஆராதித்தார்கள். மிகப்பெரிய மகிழ்ச்சி ஆனால் அவர்களுக்கு இருந்த மிகப்பெரிய விண்ணப்பம். ஆண்டவரே நான் பெற்ற இந்த பாவமன்னிப்பை இந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை என் மாமியார் பெற வேண்டும் என் கணவர் பெற வேண்டும் என் பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபித்திருக்கிறார்கள். இதுக்கு மேல் எனக்கு எதுவும் வேண்டாம். என் குடும்பத்தை உங்களால் திருத்தி உருவாக்க முடியும். அதனால் என் குடும்பத்தை இரட்சியுங்கள் என்று தினமும் ஜெபித்தார்கள். நன்றாக போய் கொண்டிருந்த அவர்கள் வாழ்க்கையில் திடீரென்று அவர்கள் மனந்திரும்பி ஓராண்டு கழித்த போது அந்த சகோதரிக்கு கால் மூட்டில் வீக்கம் உண்டானது. பின்பு பாதத்திலே வீக்கம் உண்டானது. பின்பு சரீரத்திலிருக்கிற எலும்புகள் இணையும் பகுதிகள் எல்லாம் வலி


திசையன்விளை முருகேசபுரத்தில்

# சுவிசேஷ கூட்டம்

நாள் : 19.02.2023
ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 6:45 முதல்
9:00 மணி வரை

தேவ செய்தி:
சகோ. T. ஆசீர் ஞானராஜ்

இடம்: CSI நல்ல சமாரியன் ஆலயம்,
முருகேசபுரம், திசையன்விளை.

தொடர்புக்கு:
90958 49372


உண்டானது. வாத நோயினால் எலும்புகளில் நீர் கோர்த்து கை கால் எல்லாம் வீங்கி விட்டது. வேலை செய்ய முடியாத சூழ்நிலை. ஆனாலும் வீட்டில் சொல்ல முடியாத நெருக்கடி. அவர்களால் பத்து நிமிடம் ஒரே இடத்தில் நிற்க முடியாது. ஒரு நாற்காலியில் உட்கார முடியாது. ஒரே பக்கமாக படுக்க முடியாது. முதுகு தண்டுவடம் எல்லாம் வலிக்குமாம். எவ்வளவோ செலவு செய்தும் சுகமாகவில்லை. கடைசியாக மாமியார் ஒரு காரியத்தை சொல்லியிருக்கிறார்கள். தெய்வ குற்றத்தினால்தான் இது வந்தது நம்முடைய கடவுளை விட்டு விட்டு புதிதாக அவள் ஒரு தெய்வத்தை தேடி போனதினால்தான் வந்தது அதனால் முதலில் அதை நிறுத்து என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சகோதரிக்கு மிகவும் துக்கம்.

**ஆண்டவரே என் குடும்பத்தை நீர் இரட்சித்து தாரும் என்று தானே நான் கேட்டேன் இன்றைக்கு என் மூலமாக இந்த வீட்டில் உம்முடைய நாமம் தூஷிக்கப்படுகிறதே என் வீட்டில் இப்படிப்பட்ட நிலைமை உருவாகிவிட்டது.**

**ஆனாலும் நான் உம்மை விட மாட்டேன் என்று அந்த சகோதரி அதிகாலை நான்கு மணிக்கு எழும்பி ஜெபித்தார்கள். ஆறுமாதம் அந்த வியாதியோடு இருந்தார்கள். அவர்களால் முழங்காலில் நின்று ஜெபிக்க முடியாது. நின்று கொண்டு ஜெபிக்க முடியாது. நாற்காலியில் உட்கார்ந்தும் ஜெபிக்க முடியாது முகங்குப்புற விழுந்து கிடந்துதான் அவர்கள் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். நான்கு மணிக்கெல்லாம் சரியாக அவர்கள் எழுந்து முகங்குப்புற விழுந்து அந்த குடும்பத்திற்காக தன் மூலமாக அந்த குடும்பத்தில் தேவ நாமம் மகிமைப்பட வேண்டுமென்று ஜெபித்தார்கள். கணவர் அடிக்கடி அந்த சகோதரியை கண்டிப்பாராம். முதலில் அந்த தெய்வத்தை விடு என்று சொல்லி சத்தம் போடுவாராம். அதையும் தாண்டி அந்த சகோதரி ஜெபித்த போது ஒரு நாள் அதிகாலையில் இயேசுவின் பாதத்தில் விழுந்து கிடந்தது போல அவர்கள் ஜெபித்த போது திடீரென்று ஏதோ ஒன்று அவர்கள் கைகளிலே தட்டியது போல இருக்க கண்களை திறந்து பார்த்த போது ஆணி பாய்ந்த இயேசுவின் பாதத்தை பார்த்தார்கள். அண்ணார்ந்து பார்த்தால் இயேசு நின்று கொண்டிருக்கிறார். கரம் பிடித்துஇயேசு தூக்கி விட அந்த கணப்பொழுதிலே சகோதரியின் சரீரத்திலே அற்புதமான விடுதலை உண்டானது. அவர்கள் துள்ளிக்குதித்தார்கள். அந்த காலை வேளையிலே கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். கண்களை திறந்து பார்த்த போது கணவன், மாமியார், பிள்ளைகள் அனைவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். என்ன நடந்தது என்று கேட்ட போது இயேசு வீட்டிற்குள்ளே வந்தார். இயேசு உன்னை சுகமாக்கினால் நாங்கள் இந்த இயேசுவை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னீர்களே, இயேசு என்னை சுகமாக்கிவிட்டார் என்று சொன்ன போது முழு குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டு மூழ்கி ஸ்நானம் பெற்று இயேசுவின் பிள்ளைகளாக மாறினார்கள்.**

*பிரியமானவர்களே, இது போலவே உங்கள் குடும்பத்தையும் தேவன் உருவாக்குவார். உருக்குலைந்த உங்கள் குடும்பத்தை இந்த புதிய ஆண்டிலே நான் உனக்கு முன்பாக கடந்து போய் கோணலான எல்லாவற்றையும் செவ்வையாக்குவேன். முடியாததை நான் முடியப் பண்ணுவேன் என்று ஆண்டவர் திட்டமாய் சொல்லுகிறார். முடியாத இடத்திலே நான் உன் வாழ்க்கையிலே அற்புதத்தை செய்வேன் என்று சொல்லுகிறார். இதை வாசித்துக்கொண்டிருக்கிற ஒவ்வொரு குடும்பத்திலேயும் ஆண்டவருடைய வல்லமையின் பிரசன்னத்தை, மகத்துவமான காரியங்களை கண்டு தேவனை மகிமைப்படுத்துவீர்கள். உங்களை விடுவிப்பதற்காகவே ஆண்டவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். இதுவே ஆண்டவருக்கு சித்தம். உங்களால் இயலாத*

இத்தனை ஆண்டுகள் ஜெபித்த ஜெபத்திற்கு 2023 வது ஆண்டிலே அதற்கேற்ற பலனை நீங்கள் கண்டு திருப்தியாவீர்கள். ஆண்டவர் நிச்சயமாக அதை செய்வார். **மனுஷரால் கூடாதது தான்; தேவனாலே எல்லாம் கூடும். – மத்19:26** அவர் உங்களுக்காக முன்னே போய் இந்த ஆண்டின் எல்லா நாட்களும் நீங்கள் சந்திக்கக் கூடிய புயலை நெருக்கடியை சாத்தானின் சூழ்ச்சிகளை அவர் அழித்து போட்டு உங்கள் பாதைகளை செவ்வைப்படுத்துவார். நீங்கள் அதிசயமாய் கர்த்தராலே வழி நடத்தப்படுவதை காண்பீர்கள். காரணம் நமக்கு வாக்குத்தத்தத்தைக் கொடுத்த ஆண்டவரால் செய்யக் கூடாத எந்தவொரு காரியமும் இல்லை. எல்லாவற்றையும் அவரால் செய்யக் கூடும். அவர் உங்களுக்காக நிச்சயமாக இந்த புதிய ஆண்டிலே பெரிய காரியங்களை செய்வார்.

மோசேயினுடைய குடும்பத்திற்குள் கடந்து வந்த ஆண்டவர் உங்கள் குடும்பத்திற்குள்ளேயும் கடந்து வருவார். உங்கள் பிள்ளைகள் வாழ்க்கையிலேயும் அவர் கடந்து வருவார். உங்களுடைய கைகளின் பிரயாசம் உங்களுடைய வியாபாரம் உங்களுக்கு வரக் கூடிய வருமானம் அதை ஆண்டவர் இந்த புதிய ஆண்டிலே ஆசீர்வதிப்பார்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக பெரிய அளவிலே தொழில் செய்யக் கூடிய கர்த்தருடைய மனிதரை நான் அறிவேன் அவருடைய சூப்பர் மார்கெட்டிலிருந்து நிறைய பணங்கள் சுவிசேஷத்திற்காக விதைக்கப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். சுவிசேஷத்திற்காக தாராளமாய் அள்ளிக் கொடுக்கிற மனிதர். அப்படியிருக்க அவருடைய வியாபாரத்தை சாத்தான் எப்படியாவது முடக்கிவிட வேண்டுமென்று தீர்மானித்து செயல்பட ஆரம்பித்தான்.

அதே பட்டணத்திலே முதலாவது மூன்று பெரிய ஐசுவரியவான்கள் சேர்ந்து பங்குதாரர்களாகி பெரிய அளவிலே சூப்பர் மார்க்கெட் துவங்கினார்கள். பொருட்கள் எல்லாம் மிகவும் விலை குறைவாக கொடுக்கப்பட்டது. அதே சமயத்திலே மற்றொருவர் அதே பட்டணத்தில் ஒரு பெரிய கடை ஒன்றை கட்டி பெரிய அளவில் விளையாட்டு வீரரை கொண்டு வந்து கடையின்


முதலூரில்

**எழுப்புதல் உபவாச ஜெபம்**

**நாள் : 04–02–2023 முதல் சனிகிழமை**

**நேரம்: காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை**

தேவ செய்தி:

சகோ. **T. ஆசீர் ஞானராஜ்**

**இடம்: எழுப்புதல் ஜெப மையம், முதலூர்**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!
தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!

திறப்புவிழாவை நடத்தி பரிசு பொருட்கள் எல்லாம் கொடுத்து ஆடம்பரமாக ஆரம்பித்திருக்கிறார். வியாபாரம் இவருக்கு படிப்படியாக குறைய ஆரம்பித்திருக்கிறது. நான் ஊழியத்திற்காக சென்ற போது அவர் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு இந்த நிகழ்வுகள் எல்லாம் அவர் வீட்டிற்கு சென்ற போது தான் தெரியும்.

அவர் என்னை நோக்கி: நான் எந்த பாவமும் செய்யவில்லை. நான் செய்ததெல்லாம் என் பிள்ளைகளுக்கும் என் மனைவிக்கும் தெரியாமல் ஊழியங்களுக்கு இரகசியமாய் கொடுத்ததுதான் அதை மட்டும் தான் நான் மறைவாய் செய்கிறேன். தற்போது வியாபாரமே இல்லை நான்கில் ஒரு மடங்கு வியாபாரம் மட்டுமே இப்பொழுது நடக்கிறது. மூன்று மடங்கு வியாபாரம் அழிந்து விட்டது.

ஏன் எதற்காக என்று நீங்கள் ஜெபித்து எனக்கு பதில் சொல்ல வேண்டுமென்று என்னிடம் கண்ணீரோடு கேட்டார். அந்த நாட்களில் நான் அவரோடு இணைந்து ஜெபித்த போது ஆண்டவர் தெளிவாக பேசினார். உனக்கு விரோதமாய் கூடுகிற கூட்டம் அது என்னால் உண்டாகிற கூட்டம் அல்ல. சாத்தானால் உண்டானது என்று பேசினார். நாங்கள் போராடி ஜெபித்தோம். அவருடைய தொழில் ஸ்தலத்திலே ஒரு சில காரியங்களை ஒதுக்கி அதை ஜெப அறையாக ஒழுங்கு பண்ணினோம். ஒவ்வொரு தளத்திலும் அவர் நிற்கும் போது குறித்த நேரத்தில் அங்கிருக்கக் கூடிய அந்த சிறிய அறைக்குள்ள போய் முழங்கால் போட்டு இந்த தொழிலுக்கு நீர் தான் எஜமான் இது என்னுடைய தொழில் அல்ல. இந்த பட்டணத்திற்கு வந்த போது வெறும்மனிதனாய் என்னை கொண்டு வந்தீர். இதெல்லாம் உம்முடையது. நான் இந்த ஊரை விட்டு போனால் இந்த கடை மூடப்பட்டால் உம்முடைய நாமம் தான் தூஷிக்கப்பட்டு போகும் நீர் எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று தொடர்ந்து ஜெபித்தார். ஒரு மாதம் இரண்டு மாதம் என்று ஆறு மாதங்களுக்கு பின்பு முதலாவது மூன்று பேர் சேர்ந்து கூட்டணியாக துவங்கின அடுத்த கடை அப்படியே மூடப்பட்டது. அடுத்த ஒரு ஆண்டிற்குள்ளே மற்றொரு கடையும் மூடப்பட்டது அதோடு மாத்திரமில்லாமல் அந்த பட்டணத்திலே வியாபாரிகள் சங்க தலைவராக கர்த்தர் அவரை உயர்த்தினார். அதற்குரிய அவார்டையும் பெற்றுக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்.

*நான் உனக்கு முன்னாக போவேன். உனக்கு எதிராக நிற்கக் கூடிய எல்லா மலைகளையும் நான் தகர்த்துவிடுவேன். உனக்கு முன்னாக இருக்கக் கூடிய ஐசுவரியவான்கள் அனைவரையும் நான் கீழே தள்ளி விடுவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். காரணம் உங்களை இரட்சித்த ஆண்டவர் உங்களுக்கு முன்பாக அவர் கடந்து போவார். உங்கள் வீட்டில் அவருடைய உருவாக்கும் வல்லமையை நீங்கள் உணர்வீர்கள். ஆண்டவர் அவருடைய ஜனத்திற்காக ஜீவனையே கொடுத்தவர் இந்த உலகத்தின் நன்மைகளை கொடுக்காமல் இருப்பாரா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.*

*ஜீவனை விடவா பெரிய காரியத்தை நீங்கள் கேட்கப் போகிறீர்கள்.* ***தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? – ரோமர் 8:32*** *அவர் நிச்சயமாகவே அற்புதத்தை செய்வார்.*

**சென்னை பட்டணத்திலே என்னை அதிகமாய் நேசிக்கக் கூடிய ஏழ்மையான ஒரு குடும்பத்தில் மிகவும் அதிகமாக ஜெபிக்கக் கூடிய சகோதரி இருந்தார்கள். அவர்களுடைய மகள் படித்து முடித்து வேலை இல்லாமல் இருந்தாள். அவர்கள் இடைவிடாது ஜெபித்ததினிமித்தம் அற்புதமாக வேலை கிடைத்தது. தேசமெல்லாம் வேலையில்லாமல் எத்தனையோ கம்பெனிகள் மூடப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் அந்த சகோதரிக்கு அதிசயமாக மேற்கு வங்காளத்தில் கொல்கத்தா பட்டணத்தில் பெரிய கம்பெனியில் வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளத்தில் அவள் வேலைக்கு சென்றாள். ஆறு மாதங்கள் சென்றது.**

**ஒருநாள் என்னை தொடர்பு கொண்டு அங்கிள் நான் இன்றைக்கு உபவாசம் இருக்கிறேன். அம்மா அப்பாவை நான் சிறுவயதில் இருந்து பிரிந்தது இல்லை. என்னால் இங்கு இருக்கவே முடியவில்லை. இங்கிருக்கிற சாப்பாடு ஒத்துக்கொள்ளவில்லை. நான் சரீரத்தில் மிகவும் நெருக்கப்படுகிறேன். அதனால் வேலையை கொடுத்த ஆண்டவர் எனக்கு வேலை மாறுதல் கிடைக்கவும் ஜெபியுங்கள் என்று சொன்னாள். ஆனால் அவள் வேலை பார்த்து வந்த கம்பெனியின் கிளை அலுவலகம் அப்போது சென்னையில் இல்லை. அப்படி இருந்தால் அவள் மாறுதலுக்காக அவளே முயற்சி எடுத்திருப்பாள். அன்று அந்த மகளுக்காக நான் ஜெபித்த போது உன்னை அதிசயங்களை காணப்பண்ணுவேன் என்று ஆண்டவர் சொன்னார். அவள் அதை அப்படியே விசுவாசித்தாள். நாற்பது நாட்கள் கழித்து அந்த கம்பெனி ஒரு அறிவிப்பு கொடுத்தது. சென்னையில் உள்ள கம்பெனி ஒன்றில் நாம் இணைந்து செயல்படப் போகிறோம். அதினால் சென்னையில் இருந்து இங்கு வேலை செய்கிறவர்கள் நீங்கள் வேலை மாறுதல் வாங்கிக் கொண்டு உங்கள் பட்டணத்திற்கு போகலாம் என்று அறிவிப்பு கொடுத்தார்கள். அவளுக்கு எதிராக மலைபோல இருந்த சூழ்நிலையில் தேவன் கோணலானதை செவ்வையாக்கினார்.**

*ஆகவே பிரியமானவர்களே, கோணலானவைகள், கரடானவைகள் அனைத்தையும் ஆண்டவர் அவருடைய பிள்ளைகளுக்காக செவ்வைப்படுத்துவார். ஜீவனையே கொடுத்த ஆண்டவர் நீங்கள் கேட்கிற மற்ற காரியங்களில் நன்மையை கொடுக்காமலிருப்பாரா?*

**எனவே இந்த 2023வது ஆண்டு உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதமான ஆண்டாக விடுதலையின் ஆண்டாக, ஆரோக்கியமான ஆண்டாக, சமாதானமான ஆண்டாக மாற்றுவார். நீங்கள் நன்மையை ருசிப்பீர்கள். ஆமென்.**

# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம்
### படுவா பணித்தளம்

**கொண்டாகுடா:**

- இந்த கிராமத்தில் 50 பேர் ஆராதனையில் கலந்து கொள்கின்றனர்.
- ஜானிஸ் கிலோ என்ற குழந்தைக்கு காய்ச்சலிலிருந்து ஜெபத்தினால் தேவன் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.
- பூந்தே கிலோ என்ற சகோதரி புதிதாக ஞானஸ்நானம் பெற்றுள்ளார்கள். இவர் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
- பொர்சா ஹந்தால் என்ற சகோதரி மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலை பெற்றார். பின்னர் ஆலய ஆராதனைக்கு ஜெபத்திற்கு சரியாக வருவதில்லை. இப்போது மீண்டும் மனநிலை பாதிக்கப்பட்டு பக்கத்து வீடுகளில் சண்டை போடுகிறார். இந்த சகோதரியின் விடுதலைக்காக ஜெபியுங்கள்.
- கடில்னா கிலோ கடந்த இரண்டு வாரமாக காய்ச்சலினால் கஷ்டப்படுகிறார். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- எரிக் என்ற சிறு குழந்தை வயிற்றோட்டத்தினால் கஷ்டப்படுகிறது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சுமதி என்ற சகோதரி இடுப்பு வலியினால் கஷ்டப்படுகிறார். இந்த சகோதரிக்கு தேவன் சுகத்தை கொடுக்க ஜெபியுங்கள்.
- ஜீவன் கிலோ என்ற சிறுவனுக்கு கால்களில் அதிகமாக புண்கள் உள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சன்னுகிலோ என்ற சகோதரர் வாத நோயினால் மிகவும் கஷ்டப்படுகிறார். தேவன் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- ரமேஷ் கிலோ என்ற சகோதரனுக்கு தொடையில் கட்டி வந்துள்ளது. இந்த கட்டி குணமடைய ஜெபியுங்கள்.
- ராஜீ என்ற சகோதரனுடைய மனைவி கர்ப்பவதியாக உள்ளார். திருமணமாகி பத்து வருடங்களுக்கு பின்பு குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. இந்த சகோதரிக்கு தேவன் சுகப்பிரசவத்தையும் நல்ல ஆரோக்கியமான குழந்தையையும் கொடுக்க ஜெபியுங்கள்.
- நல்லு சுனாமா என்ற தகப்பனாருக்கு நெஞ்சு பகுதியில் கட்டிகள் உள்ளது. இம்மாதம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் இதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## மாடா பணித்தளம்

**மாடா:**

- டெங்கா முதலி என்ற சகோதரர் மூல வியாதியினால் கஷ்டப்படுகிறார். இதனால் அதிகமாக இரத்தம் வெளியேறுகிறது. மிகவும் வேதனையோடு இருக்கும் இந்த சகோதரனுக்கு கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- கும்தேய் முதுலி என்ற சகோதரிக்கு நெஞ்சுவலி அதிகமாக உள்ளது. கணவன் பெயர் அர்ஜுன் முதலி புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர். கர்த்தர் இவர்களை சுகமாக்கவும், இரட்சிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள்.
- சாது என்ற சகோதரன் கஞ்சா பயிரிட்டு வியாபாரம் செய்கிறார். கர்த்தர் இவர் உள்ளத்தில் கிரியை செய்யவும் இவர் மூலமாக கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படாதபடிக்கும் மனந்திரும்பவும் ஜெபியுங்கள்.

**உப்பர்மாடா:**

- இக்கிராமத்தில் நந்தோ என்ற சகோதரனுக்கு எதிராக பில்லி சூனியம் செய்துள்ளனர். இவரது மனைவி பெயர் சுசீலா. இவர்களுக்கு பில்லி சூனிய போராட்டத்தால் சரீரம் முழுவதும் நெருப்பாக எரிவது போன்று உள்ளது. இவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து புதிய ஏற்பாடுகள் கொடுத்தேன். கர்த்தர் இவர்களை விடுதலையாக்க ஜெபியுங்கள்.
- ஜெகு பட்நாயக் என்பவருக்கு இரவு நேரங்களில் கண் தெரிவது இல்லை. இவருக்கு கர்த்தர் சுகம் கொடுக்கவும், இவர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- என்னும் என்ற கிராமத்தின் கிராம தலைவர் குரி என்பவருக்கு சுவிசேஷம் அறிவித்தேன். இவரது ஆடு, மாடுகள் வியாதியோடு இருந்தது. இவைகளுக்காக ஜெபித்தேன். கர்த்தர் அவைகளுக்கு சுகம் கொடுத்தார். இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- சுறுமிகிராமத்தில் நந்தோ நிர்க்கி, கம்சுலா நிர்க்கி ஆகியவர்கள் புதிதாக இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வருகின்றனர். இவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
- டவுன்கேப் கிராமத்தில் அஜித், சித்தா, மோத்திமா ஆகியோர் சுகவீனமாக உள்ளனர். இவர்களுக்கு கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- ரகுநாத் கொர்கொரா, சொம்நாத், கொர்கொரா ஆகிய வாலிபர்கள் மூலமாக ஜோலாப்புட் டவுன்கேப் கிராமத்தில் ஞாயிறு பாடசாலை வகுப்பு சிறுபிள்ளைகளுக்கு நடத்த தீர்மானித்துள்ளோம். இதற்காக ஜெபியுங்கள்.
- சாபித்ரி என்ற சகோதரி 8 மாத கர்ப்பவதியாக உள்ளார். இவர் உடல் மிகவும் மெலிந்து இரத்த அளவு குறைவாகவும் உள்ளது. இந்த சகோதரிக்கு தேவன் சுகப்பிரசவம்; கட்டளையிட ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. ஈரோடு கிழக்கு தொகுதிக்கு பிப்ரவரி 27ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. மார்ச் 02ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.
2. பதினெட்டு வயதுக்குக் கீழ் உள்ள இஸ்லாமிய சிறுமிகளின் திருமணம் செல்லுமா என உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தவுள்ளது.
3. இலங்கை பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றன. பாகிஸ்தானில் தற்போது அடிப்படை உணவுக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் கோதுமைக்காக பொதுமக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.
4. நாகலாந்து, மேகாலயா, திரிபுரா ஆகிய 3 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. திரிபுரா மாநிலத்தில் பிப்ரவரி 16ம் தேதியும், மேகாலயா மற்றும் நாகலாந்தில் பிப்ரவரி 27ம் தேதியும் தேர்தல் நடைபெறுகிறது. மார்ச் 02ம் தேதி வாக்கு எண்ணிக்கை மூன்று மாநிலங்களிலும் நடைபெறும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
5. உக்ரைனில் பத்து மாதங்களாக நீடித்து வரும் போரில் அப்பாவி பொதுமக்கள் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.
6. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சீனாவில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**
Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஒசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.







திருநெல்வேலி விசுவாச ஜெபக்குழு ஊழியங்கள் மூலம் நடைபெற்ற தியான முகாம்,




வெள்ளக்கோவிலில் நடைபெற்ற வாக்குத்தத்த கூட்டம்



Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.01.2023. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

## ஒட்டன்சத்திரத்தில்...

# ஜெப அபிஷேக கூட்டம்



**நாள்:**

**12.02.2023**

ஞாயிற்றுக்கிழமை

காலை 8:30 மணி 2 மணி வரை

**இடம்:**

விசுவாசிகளின் ஐக்கிய சபை,
ஒட்டன் சத்திரம்.

**தேவ செய்தி:**

சகோ.
**T. ஆசீர் ஞானராஜ்**

**தொடர்புக்கு: 8903449124**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**